**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.46/2024
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : டாக்டர். சிந்து | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of June 2025.

26.06.2025

(எதிரிகள் 1 மற்றும் 3 ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது மதுரை மத்திய சிறையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 02.09.2023ம் தேதி அதிகாலை 03.10 மணியளவில் 35 வயது மதிக்கத்தக்க கோவிந்தராஜ் என்பவரை அவரின் மனைவி சிகிச்சைக்காக அழைத்து வந்தார். மனைவியின் பெயர் விபத்து பதிவேட்டில் குறிப்பிடபடவில்லை.

**2.** நான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு இடது சுண்டுவிரலில் 3x2 cm அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது. அவருக்கு நடுமுதுகில் 3x3 cm அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது. அவரை விசாரித்தபோது அவரை அடையாளம் தெரியாது 4 நபர்கள் 01.09.2023ம் தேதி இரவு 12.00 மணியளவில் குமாரக்குறிச்சி அருகில் வைத்து கைகளால் தாக்கியதாக கூறினார். அதனால் அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தேன்.

3) பின்னர் அவருக்கு இடது மணிக்கட்டு பகுதியை xray எடுத்து வருமாறு

அவரிடம் கூறினேன். கோவிந்தராஜ் என்பவர் xray எடுத்துவிட்டு என்னை பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு வரவில்லை. மாறாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று 04.09.2023ம் தேதியில் இருந்து 12.09.2023ம் தேதி வரையில் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை பெற்றுள்ளார் என்பதை போலிசார் என்னை விசாரிக்க வந்தபோது என்னிடம் கொடுத்த மருத்துவ ஆவணங்களை வைத்து தெரிந்து கொண்டேன்.

4) போலிசார் என்னை விசாரிக்க வந்தபோது மேற்படி கோவிந்தராஜ்க்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் கொடுத்த ஆவணங்களை காண்பித்தார்கள். அதில் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என இருந்தது. அதனால் நானும் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். ஆனால் அவருக்கு எந்த இடத்தில் கொடுங்காயம் ஏற்பட்டது என்பதை இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் முகம்மது அமீர்கான் என்பவரை கேட்டால்தான் கூற இயலும்.

5) என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் என்னால் வழங்கப்பட்டது அல்ல (சாட்சியால் வழங்கப்பட்டதாக சொல்லப்படுகிற விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் வழக்கு கோப்பில் இல்லை என்பதாலும் சாட்சிக்கு கொடுங்காயம் எந்த இடத்தில் ஏற்பட்டது என்பது குறித்து கூற இயலவில்லை என்பது தெரியவருதாலும், வழகககு கோப்பில் உள்ள விபத்து பதிவேடு இந்த சாட்சி மூலமாக குறியீடு செய்ய இயலவில்லை). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) முதன்முறையா கோவிந்தராஜ் மருத்துவமனைக்கு என்னை பார்த்தபோது அவர் அவரது வேலைகளை அவராகவே செய்யும் நிலையில் இருந்தாரா என்றால் நான் பார்த்தபோது அப்படி தான் இருந்தார். நான் அவரை விசாரித்தபோது அவருக்கு உடலில் வலி இருந்ததாக கூறவில்லை என்றால்

சரிதான். நான் கோவிந்தராஜின் காயத்தை கண்ணால் உற்று பார்த்தேனா என்றால் ஆமாம் பார்த்தேன். கோவிந்தராஜ்க்கு சுண்டுவிரலில் எந்த இடத்தில் காயம் இருந்தது என்பதை விபத்து பதிவேட்டில் நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

2) பார்த்தபோதே அவரின் காயத்தின் அளவு எனக்கு தெரிந்ததால் 3x2 cm என்று உத்தேசமாக கூறினேன். மருத்துவ அறிவியலின் படி (Medical Jurisprudence) நான் ஒரு நபருக்கு உத்தேசமாக காயத்தின் அளவை கூறக்கூடாது என்றால் சரிதான். நான் விபத்து பதிவேடு பதிவு செய்த அன்றைய தினமே கோவிந்தராஜ் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்துள்ளேன் என்றால் சரியல்ல, இராமநாதபுரம் அரசு மருத்துவரின் கருத்திற்கு பிறகு தான் சான்று அளித்தேன். இந்த விவரத்தை போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்று நினைவில் இல்லை.

3) போலிசார் என்னை விசாரித்தபோது கோவிந்தராஜ் இடது மணிக்கட்டில் காயத்துடன் வந்ததாக கூறியுள்ளேனா என்றால் இல்லை. ஒரு நபரின் கையால் மற்றொரு நபரை தாக்கினால் அந்த நபருக்கு சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் இரண்டு மூன்று விரல்களின் நகங்களால் கீறினால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒரு நபர் மற்றொரு நபரை கையால் தாக்கும்போது சுண்டு விரலில் மட்டும் காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் கூறிய சுண்டு விரல் காயமும், முதுகில் உள்ள காயமும் ஒரு நபர் தனக்குதானே ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு உள்ளது என்றால் வாய்ப்பு உள்ளது.

4) நான் கோவிந்தராஜை முழுமையாக பரிசோதித்து காயச்சான்றிதழ் வழங்கவில்லை, இராமநாதபுரம் அரசு மருத்துவரின் கருத்தின்படி தான் காயச்சான்று வழங்கினேன். விபத்து பதிவேடு பதிவு செய்கிற சமயத்தில் ஒரு நபரை சிகிச்சைக்காக அழைத்து வரும் நபரின் பெயரை முழுமையாக விபத்து பதிவேட்டில் எழுதவேண்டும் என்று மருத்துவ சட்ட அறிவியலில் உள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் சிகிச்சைக்காக வரும் நபரின் கைரேகை பெறவேண்டும் என்பது சட்ட அறிவியலில் உள்ளது என்றால்

சரிதான். ஆனால் நான் பதிவு செய்ததாக சொல்லப்படுகிற விபத்து பதிவேட்டில் அவ்வாறு கைரேகை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் கோவிந்தராஜை முழுமையாக சிகிச்சை செய்யாமல் எனது யூகத்தின் அடிப்படையில் அவருக்கு கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.